11 DEC 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1982 பிப்ரவரி 18.

மாசி 6, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல் ஆன்ற பெரியார் அகத்து,"

அவையில் காதோடு நெருங்கிப் பேசுதலையும், சேர்ந்து சிரித்தலையும் தவிர்க்க வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

பாண்டிக்கண்மாய் கிராமத்தில் புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்கும் திட்டம்

*வினா எண் 241-திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பரமக்குடி தாலுகா பாண்டிக்காண்மாய் கிராமத்தில் 4 ஆண்டுகளாக டிரான்ஸ்பார்மர் மாற்றும் திட்டம் செயல்படுத்தாததினால் விவசாயம் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் விரைவில் மாற்றியமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ). (ஆ) : ஆம் பாண்டிக்கண்மாய் கிராமத்தில் புதிய மின்மாற்றி (Transformer) அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. இது விரைவில் செயல்படும்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் வேலை முடிந்துவிட்டதாகச் சொன்னார்கள், ஆனால் பார்வைக்கு வேலை முடிந்திருந்தாலும்கூட கடந்த மாதங்களாக எந்தவிதமான சப்ளையும் இல்லை. ஸ்டார்ட் செய்தால் ஸ்பார்க்தான் அடிக்கிறதே தவிர கரண்டு வரவில்லை. என்ன காரணத்தினால் கரண்டு வரவில்லை? சீக்கிரத்தில் அந்த வேலையைப்பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1982 பிப்ரவரி 18

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவரவர்களே, மின் மாற்றிக்கு உயர் அழுத்த மின் கம்பித்தொடர் தபால் தந்தி இலாகாவினுடைய அந்தக் கம்பித் தொடருக்கு மேலே வருகிறது. அதனால் அவர்கள் அனுமதி தரவேண்டும். அவர்கள் இன்னும் அனுமதி தரவில்லை. அனுமதி கேட்டு வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்,

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, தபால் தந்தி இலாகா கம்பித் தொடருக்கு மேலே வருகிறதா அல்லது கீழே வருகிறதா என்று தெரியவில்லை. அந்த டிபார்ட்மெண்டில் அனுமதி கேட்கப்பட்டு கேபிள் சிஸ்டத்தில் கீழே கம்பி இழுக் ப்பட்டு, தொடர்புகள் ஏற்படுத்தி ட்ரான்ஸ்ஃபார்மருக்கு சப்ளை வரக்கூடிய நேரத்தில் மோட்டாரை ஸ்டார்ட் செய்தால் ஸ்பார்க் அடித்துக்கொண்டிருக்கிறது. இப்போது கீழே கொடுக்கப்பட்ட கேபிள் சிஸ்டத்தை மாற்றி, மேலே லைன் இழுப்பதற்கான வேலை நடக்கிறது. ஏன் இப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது? அங்கே இருக்கிற எஞ்சினீயரிங் டிபார்ட்மென்ட் கீழ் வழியாகக் கொண்டு செல்வதா அல்லது மேல் வழியாகக் கொண்டுச் செல்வதா என்று முதலிலே திட்டமிட்டுச் செய்யாத காரணத்தால் இன்றைக்கு இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்தும் 4 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு கரண்டு சப்ளை செய்ய முடியவில்லை. குறைகளை நிவர்த்தி செய்து, உடனடியாக கரண்டு சப்ளைக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த உயர் அழுத்தக் கம்பித் தொடரானது இரயில்வே மற்றும் தபால் தந்தி இலாகா லைனைக் கடந்து வரவேண்டியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது அதை கேபிள் மூல கொண்டுவந்ததில் பிரச்சனை ஏற்பட்டு தற்போது அதை 'ஓவர் ஹெட் லைன்' என்ற அளவில் கொண்டு வருவது பற்றி பரிசீலனை நடப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தகவலுக்கு நன்றி தெரிவித்து, அதை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, ட்ரான்ஸ்ஃபார்மர், சப்-ஸ்டேஷன் கட்டுவதற்கு தேவையான (மட்டீரியல்ஸ் போதுமான அளவுக்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. அதனால் தான் காலதாமதம் என்று சொல்கிறார்கள் இந்தக் குறைபாட்டை நீக்க தேவையான மெட்டீரியல்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதனால்தான் காலதாமதம் என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை நம்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.